**// அவசரம் //** **//தனிகவனம் //**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3078/அ2/2022 நாள் 02.09.2022

பொருள் வழக்குகள் – ஊக்க ஊதிய உயர்வு சார்ந்த வழக்குகள் – நிலுவைத் தொகை பிடித்தம் – இடைக்கால தடையாணை – ஊதியம் திருத்தியமைத்தல் – உரிய ஆணைகள் வழங்கிட தெரிவிக்கப்பட்டது - சார்பாக

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 44099/எச்/இ2/2022 நாள் 16.08.2022

பார்வையில் காணும் கடிதத்தின் படி, பள்ளிக் கல்வி ஆணையரகத்தின் கீழ் பல்வேறு பள்ளிகளிலும் ஊக்க ஊதிய உயர்வு தணிக்கை தடை நிலுவைத் தொகை சார்ந்து, தொடரப்பட்டு நிலுவையிலுள்ள பல்வேறு வழக்குகளில் “ **Stay of recovery alone**” **என** குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் மட்டும், தனியருக்கு தகுதிவாய்ந்த ஊதியத்தினை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊதியம் திருத்தியமைக்கப்பட்ட வழக்குகள் சார்ந்த விவரங்களை வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகள் சார்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் **06.09.2022 ற்குள் உடன் இவ்வலுவலகத்திற்கு 2 நகல்களில்** ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தங்கள் பள்ளி சார்ந்து ஊதிய உயர்வு வழக்குகள் இல்லை எனில் **கட்டாயம் இன்மை அறிக்கை** சமர்பிக்கப்பட வேண்டும்.

தணிக்கை தடை சார்ந்த விவரங்கள் தனியரின் பணிப் பதிவேடுகளில் கண்டிப்பாக பதிவு செய்யப்பட்ட வேண்டும். மேலும் இதனை பள்ளி ஆண்டாய்வின் போது முன்னிலைப்படுத்தவும் , தணிக்கை தடை அறிக்கையின் மீதான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு** – படிவம்

// ஒப்பம்//

// க. முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்

அரசு / நகரவை உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்.

**நகல்**

சென்னை -6, பள்ளிக்கல்வி ஆணையரக நிதிக் கட்டுப்பாட்டு அலுவலருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

**படிவம்**

| S.No | Writ petitioner W.P No | Respondents | Prayer | DSE Ref No | Govt Lr.No | Date & Details of Stay order reference | Remarks |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

தலைமை ஆசிரியர் கையொப்பம்

பள்ளி முத்திரையுடன்